# அன்பிற்குரிய தோக்கியோ ..


*அலைகடல் கடந்தும், கலையுள்ளம், அருந்தமிழுள்ளம்*
*தாங்கிநிற்கும், சக கலையுறவுகள் அனைவருக்கும்*
*அமீரகப் பாலை நிலப் பகலவன் -*
*தமிழ்மாலை தனைச் சூட்டிச் சொல்லும்*
*பொன்மாலைப் பொழுதின் நல்வணக்கம்.*
*ஆலைத் தொழில் நுட்பம் இணைக்க நின்ற,*
*கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் அங்கே...*
*பாலைநிலம் நனைக்க வந்த,*
*கலைக்காவிரி, பொருணை நதிகளும் இங்கே...*
*இது சகோதரச் சங்கமம்...*
*Land of Shining sun wishes - The land of Raising Sun*

*COVID - லாக்டவுன் காலத்தில்* **பொன் மாலைப்பொழுது துபாய்** *நடத்திய உலகளாவிய இணைய நிகழ்வில்* **தோக்கியோ** *குறித்து டோக்கியோ தமிழ் சங்க நண்பர்களுக்கு நன்றியறிவித்த நட்பின் கவிதை*

**உடன் பிறப்புகள் உங்களிடம் சில கேள்விகள்.**
பொருள் நாடி, திரவியம் தேடி
எங்கு சென்றாலும்... நீங்கள் சுமப்பது தமிழன்பை மனதில் **தூக்கியோ?**
மகிழ்வாக வாழ்வது கலையால் உங்கள் களைப்பை **நீக்கியோ?**
மனிதம் மட்டும் மனதில் **தேக்கியோ?**
உங்கள் வளர்ச்சியின் இலக்கு அந்த வானத்தை **நோக்கியோ?**
வணக்கம் ... வந்தனம்... எனதன்பு ***Tokyo.***
***Tokyo***
**நீ** தொழில் நுட்பத்தின் **தாய்வீடா***?*
உலகப் பெருநகர்கள் ஏதும் உனக்கு **ஈடா?**
அதனாலோ உனது வரலாற்றுப் **பெயர் *Edo***
நேர்த்தி – நேர்மை, ஒழுக்கம்- ஒற்றுமை, மதிநுட்பம்- மனத்திட்பம்
**- கற்றுணர்ந்து கொள்ள, உற்றறிந்து வெல்ல,**
**உலகிற்கு நற்பாடம் சொல்ல**
பிறந்தது இந்த ***JAPAN ...***சிறந்தது இந்த ***JAPAN***
சொல்கிறது... "கண்ணா... எனக்கு இன்னொரு பேர் இருக்கு" ***- NIPPON"***
உலகப் பெரும் **போரா?**
உலுக்கும் நில **அதிர்வா?...**
ஊழியை ஒத்ததொரு ஆழிப் **பேரலையா??... எரிமலையா??....**
அத்தனையும் இழந்தாலும் தன்னிலை **தப்பான்...**
அழுதரற்றி குறையேதும் **செப்பான்...**
அனுபவத்தால் தினம் பாடம் **கற்பான்...**
வெற்பெனவே விரைந்தெழுந்து **நிப்பான்...*NIPPON***
இது... சுமக்கும் உடலுக்கு, உயிரின் கைகுலுக்கல்.
உலக வாகனங்களில் பெரும்பான்மை உமது...
இயங்கும் எரிபொருள் எமது...
எனவே இது,
**உலகைச் சுமக்கும் உடலுக்கும்,**
**இயக்கும் உயிருக்குமான அன்பான கைக்குலுக்கல்**...

தொலை தூரம் வந்து தமிழைச் **சேர்த்தமைக்கும்,**
தமிழ்க்கலையை கலையால் நாட்டை **ஈர்த்தமைக்கும்**
வாழ்த்துகள்... வணக்கங்கள்...





*சசி குமார் கடலூரில் வளர்ந்த நெல்லைக்காரர். இருபதாண்டுகளுக்கும் மேலாக அமீரகத்தில் வசிக்கிறார். அருமை மனைவி மீனா, அருந்தவப்புதல்வன் அரவிந்த் பாரதியுடன் பொன்மாலைப் பொழுது மற்றும் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் தூணாக விளங்குபவர்..* ***மெல்லச்சிறகசைத்து.. (பயண நூல்), எழினி (குறுநாடகத் தொகுப்பு)*** *என்கிற இரு நூல்களின் ஆசிரியர். துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தில் (DEWA), முதுநிலைப் பொறியாளராக, திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பணி.*

# அமீரகத்திலிருந்து நாங்கள்.

**சசி S குமார்**

இத்தனை அபிமானமா? இத்தனை அன்பா?
உதாரணம்
**"ஹிதேத்தோஷி யாஸூதா"** – **"நீ... சுனாமியில் அணையாத நெருப்புடா!"**
====
வரியில்லாப் பொருளை வாங்குவதில் யாருக்குத் தான் ஆர்வமில்லை
**ஆச்சர்யம்!?!**
ஒரு வரியில்லாப் பொருளை வாங்குவதில் மட்டும் யாருக்கும் ஆர்வமில்லை.
**"Made in Japan"** என்ற ஒரு வரி இல்லாத பொருட்களை
வாங்குவதில் எவருக்கும் ஆர்வமில்லை.
====
**வாமனன்** ஆனாலும் வான் வரை -- எழுந்து நின்றவை இரண்டு
எழுசீர் தமிழ்க் குறள், குறள்- பெற்ற குழந்தை போல்,,, ஹைக்கூ...
மூன்றே வரிகளில் – சொற்திறம் காட்டும் சித்திரம்.

---

***<u>இப்படிச் சொல்லலாம் ஜப்பானின் சாதனையை -</u>***

- எழுபதுகளில் எழுதப் பேனா ...
- எண்பதுகளில் எழுந்து நின்ற டேப்ரிகார்டர், கேஸட்
- தொண்ணூறுகளில் கேட்டு மகிழ்ந்த, சோனி வாக்மேன்...
- தட்டிக்கணித்த **Casio** , ஓட்டித்திரிந்த **Yamaha, Kawasaki**
- இரண்டாயிரத்தில் அலுவல் மேசை, மடிகளில் அமர்ந்த **Toshiba, Fujitsu...**
- சாலைகளில் நகர்ந்த **Toyota, Nissan, Honda, Mitsubishi...**

அத்தனையும் அத்தனையும் **Japan ... Japan ...**
**அகிரா குரசோவா... தகேஷி கித்தானொ**... என இயக்குநர்
பாதிப்பில் இருந்து எந்தக் கலைஞனும் **தப்பான்...**
ஆயிரம் திறமைகள், லட்சத்தில் பெருமைகள்
பசிபிக் சமுத்திரமாக , உங்கள் தேசத்தில் குவிந்து கிடக்க,
**மகிழ்ந்து கிடந்த உலகு, -- உன்னைக்கண்டு**
**நெகிழ்ந்த கணமொன்று உண்டு...**
***2011... நில அதிர்வு; ஆழிப்பேரலை. அணுவுலைகள் கதிர்வீச்சு...***
**மூன்றும் ஒன்றாய் சேர்ந்து தாக்க,**
***Fukushima...***
அணுஉலைகள் கதிர்வீச்சு ... வசிப்பிடங்களை விட்டு வந்த மக்கள்...
மரணம் தொடும் தொலைவில்... எனினும்
மனிதம் காத்த மனிதர்கள்...
வன்முறையில்லை... வரம்பு மீறலில்லை...
குரல்கள் உயர்த்தவில்லை... குற்றங்கள் ஏதுமில்லை....
குணத்தில் மாற்றமில்லை...
வாழ்வின் மாண்புதனை
வணங்கிக் கற்றது இவ்வுலகம்
இணங்கிச் சொல்வோம்,

**இத்தனைத் தெளிவும், இத்தனை அன்பும்,**
**இத்தனை நேசமும், இத்தனை நேர்மையும்,**
**இத்தனை ஒழுக்கமும், இத்தனைப் பெருமையும்,**
**இத்தனைப் பொறுமையும், இத்தனை தகைமையும்**
**இத்தனைத் தன்மையும், இத்தனை உண்மையும்,**
**உணர்வாகக் கொண்ட ஜப்பான்...**
**இன்னும் ஒரு முறை சொல்வேன் -இவன்**
**உலகில் என்றென்றும் உயர்ந்து**
**நிற்பான்.**



# கவிதைத் தோட்டத்தின் காயாத புல்வெளி ..

சசி S குமார்

கவிதைத் தோட்டத்தின் காயாத புல்வெளி
காதல்
அகராதிகளுக்குள் அடங்காத வார்த்தை
மொட்டவிழும் பூந்தளிர்
உருக்கும் சூரியக்குளிர்
உறைபனியில் உணரும் வியர்வை
கண்களால் கேட்கவும்,
செவிகளால் காணவும்,
நாவினால் சுவாசிக்கவும்,
நாசியால் சுவைக்கவும்,
முடிகிற ஒரு மாற்று ஏற்பாடு.

காதல்
ஆணோ பெண்ணோ?
ஆயுள் முழுக்க மனசு சுமக்கும் மௌன கர்ப்பம்.
தன்னை பிறர்க்கென இழக்கவும்
இழந்து பிறரை மீட்கவும்
சாத்தியப்படும் சந்தோஷம்
சூரியனை சூடிக்கொள்ளவும்
முழுநிலவில் முகம் பார்க்கவும்
முயன்று வெல்லும் முழு ஆச்சர்யம்

காதல்
அம்மா என்ற சொல்லுக்கு அடுத்தபடி
அகிலம் அதிகம் உச்சரித்தது.
அதைவிட அதிகம் அடுத்தவர்
அது பற்றி எச்சரித்தது.
எத்தனை எழுதியும், தீராத ஏக்கம்...
இத்தனை சொல்லியும் இன்னும்
மிச்சமிருக்கும் உணர்வின் உச்சம்.

நான் விரும்பிய உன்னை தொலைத்ததை விட
நீ விரும்பிய என்னை உன்னிடமிருந்து
பறித்துக் கொண்ட குற்றஉணர்வு -இன்றும்
என்னை குறுகச் செய்கிறது.
என்றேனும் ஒரு நாள்....
என்றேனும் ஒரு நாள்...
நாம் எதிர்கொள்ள நேரும்.

பள்ளிக்கூட விழாவிலோ,
பயணத்தின் இடையிடோ,
இலக்கிய நிகழ்விலோ,
இரங்கல் கூட்டத்திலோ,
திருமண விழாவிலோ,
திரையரங்க வரிசையிலோ,
பெருவணிக வளாகப் படியிலோ,
சிறு நடைபாதைக் கடையிலோ...
போக்குவரத்து நிறுத்தத்திலோ,
பிரார்த்தனை முடிந்து கலைகிற கூட்டத்திலோ....
ஏதேனும்... எங்கேனும்... ஓர் இடத்தில்
எதிர்கொள்ள நேரும்.

அந்த ஒரு நொடியின் நீளத்தையும்
பார்வையின் ஆழத்தையும்
எதிர்கொள்ள என்ன? என்ன?
இருக்கிறது நம்மிடம்?
கண்களுடன் கை கோர்த்து
வார்த்தைகளும் நீர்த்து போகும்
அந்த நொடியை எதிர்கொள்ள
என்ன இருக்கிறது நம்மிடம்?
இத்தனை வருட வாழ்க்கை வெயிலிலும்,
மனதின் ஈரம் காய விடாமல்
காத்திருக்கும் "காதல்" என்ற
ஒன்றைத் தவிர
வேறு என்ன இருக்கப் போகிறது
நம்மிடம்???



*சசி குமார் கடலூரில் வளர்ந்த நெல்லைக்காரர். இருபதாண்டுகளுக்கும் மேலாக அமீரகத்தில் வசிக்கிறார். அருமை மனைவி மீனா, அருந்தவப்புதல்வன் அரவிந்த் பாரதியுடன் பொன்மாலைப் பொழுது மற்றும் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் தூணாக விளங்குபவர்..* ***மெல்லச்சிறகசைத்து.. (பயண நூல்), எழினி (குறுநாடகத் தொகுப்பு)*** *என்கிற இரு நூல்களின் ஆசிரியர். துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தில் (DEWA), முதுநிலைப் பொறியாளராக, திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பணி.*